**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண். 415/2023**

2026−ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11−ம் நாள் புதன்கிழமை **பி.வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி | தொழில் | |
| க/பெ | சின்னப்பன் | கிராமம் | படியூர் |
| வயது | 70 | தாலுகா | காங்கயம் |
| | | மாவட்டம் | திருப்பூர் |

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. படியூர் கிராமத்தில் தெற்குபாளையம், சம்பந்தம் பாளையம் செல்லும் சாலையில் எனக்கு சொந்த வீடு உள்ளது. மேற்படி வீட்டில் நான் 20 ஆண்டுகளாக குடியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எங்கு குடியிருக்கிறேன் என்பதை காட்டுவதற்கு என்னுடைய ஆதார் அடையாள அட்டையும் குடும்ப அட்டையோ அல்லது வருமான வரி அட்டையோ நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தெற்குபாளையத்தில் குடியிருக்கும் வீடு டார்சு வீடாகும். மேற்படி வீட்டின் வீட்டு வரி என்னுடைய பெயரில் உள்ளது. என்னுடைய கணவர் அரவங்காட்டில் பணிபுரிந்து வந்தார் என்று சொன்னால் சரிதான். அவர் 2000 வருடம் ஓய்வு பெற்று விட்டார். அதன் பிறகு தான் நான் அரவங்காட்டில் இருந்து படியூர் வந்து சேர்ந்தோம் என்றால் சரிதான். என்னுடைய மகன்கள் இரண்டு மூன்று பிரதிவாதிகள் அருவங்காட்டில் தான் படித்தார்கள் என்று சொன்னால் சரிதான். வாதி, பழனி என்பவருடைய கடைசி மகன் என்று சொன்னால் சரிதான்.

2. மேற்படி பழனிக்கு பாப்பம்மாள் என்கிற மனைவி உண்டு என்று சொன்னால் சரிதான். அவருக்கு என்னுடன் சேர்த்து சரசு, எஸ்தர் மற்றும் நான் ஆகியோர் பெண் மக்கள் என்றால் சரிதான். கடைசி மகன் வாதியாவார். நான் என்னுடைய கடைசி மகனான மூன்றாம் பிரதிவாதியுடன் தான் குடியிருக்கிறேன். சரசு என்பவருடைய கணவர் பெயர் ஆரப்பன். அவரை கூத்தம்பூண்டி என்ற ஊருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். எஸ்தர் என்பவருடைய கணவர் பெயர் குப்புசாமி என்கிற ஜான்பால். நான் கூறுவது போல அவரது பெயர் குப்புசாமி இல்லை என்றாலும் ஜான்பால் தான் என்று சொன்னால் சரியல்ல. அவர்கள் பவானியில் குடியிருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு லீலாவதி என்கிற ஒரு மகள் இருக்கிறார் அவரை அரச்சலூர், கூத்தம்பட்டியில் திருமணம் செய்து கொடுத்திருக்கிறோம். சரசோ, எஸ்தரோ அல்லது லீலாவதியோ தாவா சொத்தை பொறுத்து எந்த பிரச்சினையும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு நினைவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் 6 சென்ட் ஆகும். 6 சென்ட் நிலத்திற்கு தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து ஆதியில் இந்திரா நகர் ஊர் நத்தமாக இருந்தது என்று சொன்னால் சரிதான். பழனி மேற்படி இடத்தில் ஓட்டு வீடு கட்டி முடிந்த போது அவருக்கு பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பட்டா நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை நான் பார்வையிட்டேனா என்றால் பார்த்துள்ளேன். மேற்படி பட்டாவில் சொத்தை குறித்து குறிப்பிட்ட நீள அகலங்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் அடிப்படையில் நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் பழனி பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

3. நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் ஈரோடு நில அளவையர் தாவா சொத்தை அளந்து பார்த்து சரியாக உள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நில அளவையரின் சான்று நீதிமன்றத்தில் இரண்டாவது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியும். நில அளவை செய்யப்பட்டபோது நான் நீலகிரியில் இருந்தேன்

என்றால் சரிதான். ஏசையா என்பவருடைய தாயார் பாப்பம்மாள் 6.10.1999 ஆம் தேதி இறந்து விட்டார் என்று சொன்னால் சரிதான். அவருக்கு ஏசையன் இறுதிச் சடங்கு செய்தாரா என்றால் இல்லை. நான் வழக்குக்காக மேற்படி ஏசையன், பாப்பம்மாவுக்கு இறுதிச்சடங்கு செய்யவில்லை என்று தவறாக குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏசையன் வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். பாப்பம்பாள் இறந்தபிறகு 16–ம் நாள் நிகழ்வு செய்யப்பட்டதா என்றால் செய்யப்பட்டது. பதினாறாம் நாள் நிகழ்வு முடிந்த பிறகு மேற்படி பழனி, ஏசையா என்பவரிடம் தாவா சொத்து குறித்த ஆவணங்களை கொடுத்து அதை வாய்மொழியாக அவரே வைத்துக்கொள்ள சொல்லி சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. அவர் சொன்னார் என்றாலும் வழக்குக்காக அதை மறுத்து சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பழனி 23.09.2000 தேதியில் இறந்தார். மேற்படி இருவரின் இறப்பு சான்றும் வாதி தரப்பில் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். என்னுடைய தரப்பில் வருவாய் துறை ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் இருந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

4. தாவா சொத்தின் வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் வாதி வசம் உள்ளது. தாவா சொத்தில் இருந்த கட்டிடத்தை 2003 ஆம் வருடம் இடித்து நிரவினார்கள். அதை வாதி தான் முன்னின்று நடத்தினார். வாதி தரப்பில் மேற்படி இடத்தில் கட்டணம் கட்டுவதற்கான பிளான் மற்றும் செலவு பட்டியலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியாது. வாதி செலவு செய்து மேற்படி கட்டிடத்தை கட்டியதால் தான் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி வீட்டிற்கு வீட்டு வரியின் பழைய எண், புதிய எண் என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் நினைவில்லை. வாதி பெயரில்தான் வீட்டு வரி ரசீதுகள் இருக்கிறது என்றாலும் அதை நீதிமன்றத்தில் அவர்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சரியல்ல.

5. மேற்படி வீடு தார்சு வீடாகும். மேற்படி வீட்டின் மின் இணைப்பு எண். 113 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு எண் 113 என்று குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்துக்கு மின் இணைப்பு எண். 635 என்றாலும் 113 என்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாதி தாவா சொத்தை தன்னுடைய பாத்தியத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதால் தான் மேற்படி தாவா சொத்தில் உள்ள மின் இணைப்புக்கான அட்டையும் மின்கட்டண ரசீதையும் அவர் தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட ஆவணங்களுக்கு எதிராகமேற்கண்ட ஆவணங்களுக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய இரண்டு மகன்களுக்கும் எதிராக வாதி காங்கேயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். குடும்ப பிரச்சனை காரணமாக புகார் கொடுத்தார். ஜன்னல் கதவுகளை தீயில் வைத்து உடைத்ததாக புகார் கொடுத்தார் என்றால் குடும்ப பிரச்சினை காரணமாக அவ்வாறு உடைக்கப்பட்டதால் புகார் கொடுக்கப்பட்டது. வாதி வீடு கட்டி அனுபவித்து வரும் தாவா சொத்தில் நான் பங்கு வேண்டும் என்று கோரி அதுவாதியால் மறுக்கப்பட்டதால் என்னுடைய மகன்களை விட்டு தாவா சொத்தை சேதப்படுத்த முயன்றேன் என்று சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்து நான் எந்த இடையூறும் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் பாகம் கோரி நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் இதுவரையில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் எனக்கு பாகம் இல்லை என்பது தெரிந்ததால் தான் நான் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் என்னுடைய மகன்களின் நிர்பந்தம் காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டும் என்று

சொன்னால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.11 19:15:47 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.